நலவாதிகள், அரசியல்வாதிகள், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களைப் பற்றி மிகக் கேவலமான முறையில் விமர்சிப்பதை, மக்கள் மத்தியில் உழைக்கிற அந்த மாபெரும் சமூகநலவாதிகளுக்கு ஏற்படுகிற அவமானங்களை தடுக்க அரசு. . . .

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும். இது சுவரொட்டி பற்றியது. போதும், ஆபாசத்தைப் பற்றி இதற்கு மேலே வேண்டாம்.

வினா எண் *172* திரு. சோ. இராசாராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் ச. ஆரோக்கியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

172--

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தற்கால கல்விசார் பணியாளர்களை பணி நிரந்தரமாக்குதல்.

9130*–திரு** *சோ. இராசாராமன் :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் தற்காலிக கல்விசார் பணியாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). தற்காலிகமாக பணியாற்றிய 26 பேர்களுக்கு நிரந்தரப் பணி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இன்னும் சில பேர்கள் கல்விசார் பணியாளர்களாக இருக்கிறார்கள். அவர்களை பெர்மனென்ட் செய்வதற்கு அரசு மீண்டும் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள் ஊதியத்தில் 6 பேர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது தொகுப்பு ஊதிய அடிப்படையில் நியமனம் பெற்று இருக்கிறார்கள். அவர்களைத் தவிர, தற்காலிகமாக ஆய்வாளர்கள் யாரும் பல்கலைக்கழகப் பணியில் இல்லை. ஆட்சிக் குழுவின் ஒப்புதல் பெற்றும், அவ்வப்போது எழும் தேவைகளுக்கு ஏற்பவும், நிதி நிலைமைக்கு ஏற்பவும் மேற்கண்ட 6

1994 ஜனவரி 5]

பேர்களுக்கு நிரந்தரப் பணி அளிக்கப் பெற ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 173, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

173–

திருத்துறைபூண்டி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் ஆசிரியர்கள் நியமித்தல்.

13316–திரு ஜி. பழனிசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகபட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமிக்கப்படுவர் ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு விதிகளின்படியும் அரசின் நிதி நிலைமைக்கேற்பவும் கூடுதல் பணியிடங்கள் வழங்கும் போது இப்பள்ளியில் கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மாணவர்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதாகக் கூறினார்கள். ஆனால் ஒவ்வொரு வகுப்பறைகளிலும், 120 முதல் 140 வரை பயிலக் கூடிய மாணவியர்களுக்கு ஒரே ஆசிரியர் பாடம் நடத்தக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் மொத்தமாக 8 ஆசிரியர் இடங்கள் காலியாக இன்றைய தினம் இருக்கின்றன. எனவே, அந்தக் காலி இடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு கீழ்க்கண்டவாறு கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் தேவைப்படுகின்றன என்று கருத்துரு அனுப்பப்பட்டு இருக்கிறது. அங்கே ஒரே ஒரு தமிழ்